

# நானிலம் போற்றும் நான்காண்டுச் சாதனைகள்! திராவிட மாடல் ஆட்சியின் முதல்வர், இந்திய தேசத்தின் 'மாடல்' முதல்வர்!



கோவையில் “மக்களுடன் முதல்வர்” திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.

நெல்லை. தூத்துக்குடி, தென்காசி, கன்னியா குமரி, கடும் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண நிதி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களால், ரூபாய் 6000 என்று அறிவிக்கப்பட்டு அம்மக்களுக்கு நிவாரண நிதி வழங்கப்பட்டது.

வைக்கம் போராட்ட நூற்றாண்டு விழா – சிறப்பு மலர் வெளியீடு, முதல்வர் மு.க.ஸ்டாலின், கேரள முதல்வர் பினராயி விஜயன், திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி ஆகியோர் பங்கேற்பு.

**அரசுப் பள்ளிகளில் படித்த மாணவர்களுக்கு உயர் கல்வி பயில மாதந்தோறும் ரூ. 1000 வழங்கும் தமிழ்ப் புதல்வன் திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கோவையில் துவக்கி வைத்தார்!**

## திக்கெட்டும் தித்திக்கும் திராவிட மாடல் ஆட்சியின் சிறப்பான சாதனைகள்!

**கிளாம்பாக்கத்தில் ரூ.393.74 கோடி மதிப்பீட்டில் இந்தியாவிலேயே மிகப் பெரிய அளவில் ‘கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம்’ முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களால் திறந்து வைக்கப் பட்டது.**

**2024**

சென்னையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் உலக முதலீட்டாளர்கள் மாநாடு நடை பெற்றது. இதில் தமிழ்நாட்டின் தொழில் முன்னேற்றத் திற்காக பல்வேறு வெளிநாட்டு முதலீட்டாளர்கள் தொழில் தொடங்கிட முன் வந்தனர்.

**மதுரையில் ரூ 44 கோடி மதிப்பீட்டில் கலைஞர் நூற்றாண்டு ஏறு தழுவுதல் அரங்கத்தினை முதல் வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.**

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஸ்பெயின் சென்று தொழில் முதலீட்டாளர்களை சந்தித்து தொழில் முதலீடு களை கொண்டு வந்தார்.

முதல்வர் தலைமையிலான திராவிட மாடல் அரசில் அமைச்சர் உதய நிதி ஸ்டாலின் அவர்களின் விளையாட் டுத் துறையானது பல்வேறு சாதனைகளை நிகழ்த்தி வருகிறது. அதில் ஒன்று தான் சென்னையில் நடை பெற்ற யூட்கேலோ–இந்தியா விளையாட்டுப் போட்டி ஆகும். இந்தப் போட்டியில் தமிழகம் 38 தங்கம், 21 வெள்ளி,39 வெண்கலம் பதக்கங்கள் பெற்று இரண்டா வது இடத்தை பிடித்தது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் புதுப்பிக்கப்பட்ட கலைஞர் நினைவகம் திறந்து வைக்கப்பட்டது.

தூத்துக்குடி குலசேகரப்பட்டினத்தில் நாட்டின் 2 வது ராக்கெட் ஏவுதளத்துக்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

நாடாளுமன்றத் தேர்தலில் இந்தியா கூட்டணி தமிழ் நாட்டில் தி.மு.க. தலைமையில் போட்டியிட்டதில் 39 தொகுதிகளிலும் வெற்றி பெற்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சாதனைகளுக்கு மக்கள் அங்கீகாரம் அளித் தனர். புதுச்சேரியிலும் இந்தியா கூட்டணியே வெற்றி பெற்றது குறிப்பிடத்தக்கதாகும்.

தி.மு.க. ஆட்சிக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்க ளின் சாதனைகளுக்கு மக்கள் அங்கீகாரம் கிடைக்கும் வகையில் விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் தி.மு.க. வெற்றி பெற்றது. கலைஞர் கனவு இல்லத் திட்டம்.

திருவண்ணாமலை, நாமக்கல், புதுக்கோட்டை, காரைக்குடி மாநகராட்சிகள் துவக்கம்.

பழனியில் முருகன் மாநாடு!

**தொழிற்சாலைகளில் பணி புரியும் பெண்களுக் காக 18,720 படுக்கைகளுடன் கொண்ட ‘தோழி’ விடுதி - காஞ்சிபுரத்தில் திறப்பு.**

**பவானி ஆற்றின் உபரி நீரை கோவை, திருப்பூர், ஈரோடு விவசாயத்துக்கு பயன்படுத்த அத்திக்கடவு- அவினாசி திட்டம் துவக்கம்.**

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நினைவு நாண யம் மத்திய அமைச்சர் ராஜ்நாத் சிங் முதல்வர் முன்னி லையில் வெளியிட்டார்.

ஆகஸ்ட் 27 ஆம் தேதி அன்று முதலீடுகளை இழுக்க முதல்வர் அமெரிக்கா பயணம் மேற்கொண்டார்.

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னின்று நடத்திய தெற்காசியாவிலேயே முதல் முறையாக சென்னையில் இரவு நேர சாலை ஃபார்முலா 4 கார் பந்தயம் ஆகஸ்ட் 31, செப்டம்பர் 1 ஆகிய தேதிகளில் நடைபெற்றது. இந்த ஃபார்முலா 4 கார் பந்தயப் போட்டி பலரால் பாராட்டப்பட்டது.

அமெரிக்கா சென்ற முதல்வர் மு.க.ஸ்டாலின் சென்னை திருப்பியபோது செய்தியாளர்களிடத்தில் ரூ.7516 கோடி முதலீடுக்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய் யப்பட்டுள்ளதாக கூறினார்.

துணை முதலமைச்சராக உதயநிதி ஸ்டாலினை நியமனம் செய்தார் முதல்வர்.

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சீரிய திட்டங்களில் ஒன்றான மக்களைத் தேடி மருத்துவ திட்டத்திற்கு ஐ.நா. விருது வழங்கி கௌரவித்தது.**

கடும் மழை பெய்த விழுப்புரம், கடலூர், கள்ளக் குறிச்சி மற்றும் தூத்துக்குடி நெல்லை மாவட்டங்களுக்கு முதல்வர் ரூ.2000, ரூ.1000 நிவாரண நிதி வழங்கினார்.

**அய்யன் திருவள்ளுவர் சிலை முதல் விவேகா னந்தர் பாறை வரையிலான - கடலுக்கு மேலே கண்ணாடி இழையிலான நடைப்பாலத்தினை முதல் வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.**

**2025**

சமூக நீதி போராளிகள் மணிமண்டபம்! விழுப்புரம் வரத ராட்டியில் முன்னாள் அமைச்சர் ஏ.கோவிந்தசாமி அவர்களுக்கு நினைவகம் 21 சமூக போராளிகளுக்கு மணிமண்டபம் திறந்து வைத்து அவர்களின் தியாகத்தை போற்றினார் முதல்வர்!

இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாவில் வசிக்கும் இலங்கைத் தமிழர்களுக்கு பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பெண்களுக்கு பாதுகாப்பளிக்கும் மாநிலமாக தமிழ் நாடு திகழ்ந்து வருகிறது. மேலும் அதனை உறுதிபடுத் தும் வகையில் பாலியல் குற்றம் புரிவோருக்கு கடும் தண்டனை நிறைவேற்றும் வகையில் சட்டப்பேரவையில்




புதிய சட்ட முன் வடிவு கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

**தமிழ்நாட்டில் குறைந்த விலையில் மருந்துகள் விற்பனை செய்யும் வகையில், 1000 முதல்வர் மருந்தகங்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.**

**கொளத்தூர் தொகுதி பெரியார் நகரில் ரூ.210 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட பெரியார் அரசு மருத்துவமனையை மக்கள் பயன்பாட்டிற் காக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்து சிறப்பித்தார்.**

ஒன்றிய அரசின் வக்ஃப் திருத்த மசோதாவுக்கு எதிராக பேரவையில் தீர்மானம். உச்சநீதிமன்றத்தில் வழக்கு– இடைக்கால தடை விதிப்பு

ஆளுநர் ஆர்.என். ரவி 10 மசோதாக்களுக்கு ஒப்புதல் வழங்காததற்கு உச்சநீதிமன்றம் ஒப்புதல் வழங்கிய வர லாற்றுச் சிறப்பு மிக்க தீர்ப்பு மற்றும் பல்கலைக் கழக வேந்தராக முதல்வர் செயல்படுவார், துணை வேந்தர் களை முதல்வர் நியமனம் செய்யலாம். என்று உச்சநீதி மன்றம் அதிரடி தீர்ப்பை பெற்றுத் தந்தார் முதல்வர்.

கடனை வலுக்கட்டாயமாக வசூலித்தால் சிறை வழங் கும் வகையில் ஏழை எளியவர்களை பாதுகாக்கும் வகை யில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கொண்டு வந்து நிறைவேற்றிய சட்ட மசோதா.

அரசு ஊழியர்களுக்கு 9 வகையான சலுகைகள் – முதல்வர் மு.க.ஸ்டாலின் பேரவையில் அறிவிப்பு.

**மாற்றுத் திறனாளிகளுக்கு உள்ளாட்சி அமைப்புகளில் பிரதிநிதித்துவம்!**




**முத்தமிழறிஞர் கலைஞர் பெயரில் கும்பகோணத்தில் பல்கலைக்கழகம்!**

**மாநில சுயாட்சி உரிமை, ஒன்றிய - மாநில அரசுகளின் உறவுகளை ஆராய உயர்மட்ட குழு!**

**இனி ஆண்டு தோறும் செப்டம்பர் 6 ஆம் நாள் காவல் நாளாகக் கொண்டாடப்படும். அரசு ஆவணங்களில் இருந்து ‘காலனி’ எனும் சொல் நீக்கப்படும் என்று முதல்வர் பேரவையில் அறிவித்தார்.**

உச்சநீதிமன்றம் பத்து மசோதாக்களுக்கு ஒப்புதல் தந்ததால் முதல்வர் வேந்தர் ஆனார். துணை வேந்தர் களையும் முதல்வரே நியமிக்கலாம் என்று உச்சநீதி மன்றம் பெற்றுத் தந்த தீர்ப்பிற்கு நன்றி தெரிவிக்கும் வகையில் உயர்கல்வி துறை முதல்வரை பாராட்டி பெருமைபடுத்தி நன்றி தெரிவித்தல் விழா. முதல்வர் ஏற்புரை!

பாவேந்தர் பாரதிதாசன் பிறந்த நாளை முன்னிட்டு ஏப். 29 முதல் மே 5 வரை தமிழ் வார விழா!

**5.5.2025 - மே 5 - வணிகர் நாளாக கடைபிடிக்க அரசாணை!**

தமிழ்நாட்டு மக்களின் நலனுக்கான, தமிழ்நாட்டு மக்களின் உரிமைக்காக, இந்திய மக்களாட்சி, மாநில உரிமைகளை பாதுகாத்திட சட்டப் பேரவை மாண்பை காத்திட உச்சநீதி மன்றம் வரை சென்று போராட இந்திய ஜனநாயகத்தை காத்த கழகத் தலைவர், முதல்வர் அவர் களுக்கு இன்னும் எத்தனை பாராட்டு விழாக்களையும், நன்றி விழாக்களையும் நடத்தலாம். ஏனென்றால் தமிழ் நாடு இன்றைக்கு இந்தியாவிற்கே முன்மாதிரி மாநில மாக திகழ்ந்து கொண்டிருக்கின்றது. இதற்கான அச்சா ரத்தை அமைத்தவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள். அவரது சாதனைகள் நாளொரு சாதனை என்று சொல் லக் கூடிய வகையில் சாதனைகளை செய்து கொண்டி ருக்கிறார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் “ஸ்டாலின் என் றால் உழைப்பு உழைப்பு உழைப்பு” என்று அப்போது அவர்கள் கூறினார்.

இப்போது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இருந் திருந்தால் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இந்த நான்காண்டு கால திராவிட மாடல் அரசின் சாதனை களையெல்லாம் பார்த்து,

ஸ்டாலின் என்றால் சாதனை சாதனை சாதனை என்று கலைஞர் கூறுவார் பேரவையில் காவல் துறை மானியக்கோரிக்கை பதிலுரையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கூறினார். அது நூற்றுக்கு நூறு உண்மைதான்.

இன்றைக்கு முத்தமிழறிஞர் கலைஞர் உருவில்,

**தமிழ்நாட்டு மக்களின் நெஞ்சங்களில் உள்ளத் தில் இருந்து ஸ்டாலின் என்றால் சாதனை... சாதனை... சாதனை...”**

**என்றே தமிழ்நாடு முழுவதும் ஒலித்துக் கொண்டிருக்கின்றன.**

**வாழ்க முதல்வர் மு.க.ஸ்டாலின்!**

**அவரது சாதனைகள் தொடருகிறது.**

**2026 ஆம் ஆண்டு தேர்தலிலும் வெற்றி வாகை சூடி இதே ஆளுநர் மாளிகையில் திராவிட முன்னேற்றக் கழகம் ஏழாவது முறையாக அரியணை ஏறுகிறது.**

**கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள்**

**இரண்டாவது முறையாக,**

**முதலமைச்சராக பொறுப்பேற்கும் போது,**

**முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்....!**

– அந்த இனிய சந்தோஷமான நாளை கழகத் தலை வர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு வழங்கிட தமிழ்நாட்டு மக்கள் 2026 ஆம் ஆண்டு தேர்தலை எதிர் நோக்கி இருக்கின்றனர்.

**முதல்வர் மு.க.ஸ்டாலின் நான்காண்டு கால சாதனைகள்;**

**தமிழ்நாட்டை வளப்படுத்தும் சாதனைகள்,**

**தமிழ்மொழியை மேன்மைபடுத்தும் சாதனைகள்,**

**ஏழை எளிய மக்களின் கண்ணீரைத் துடைக்கும் சாதனைகள்,**

**இளைஞர்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்தும் சாதனைகள்,**

**பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் சாதனைகள்,**

அதுமட்டுமா...?

சிறார்கள் முதல் முதியவர் வரை ஒவ்வொருவருக்கும், ஒவ்வொருவரின் குடும்பத்தினருக்கும் முதல்வர்

## மக்களே தலைமை, மக்களால் எல்லாம், மக்களுக்காக அனைத்தும்!

மு.க.ஸ்டாலின் அவர்களின் திட்டங்கள் சாதனைகளாக சென்றடைந்திருக்கின்றன.

வாழ்க முதல்வர் மு.க.ஸ்டாலின்!

அவர் பணி சிறக்க,

அவரது தொண்டு தொடர,

அவரது மக்கள் பணி சிறக்க,

மேலும் மேலும் சாதனைகள் செய்ய 2026 ஆம் ஆண்டு தேர்தலை எதிர்நோக்கும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு

தமிழ்நாட்டு மக்கள் சார்பில் வாழ்த்துகள்!